# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்


Volume: 14 | Issue : 11 | FEBRUARY 2026 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



















அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

## அஸ்கிதெ ங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. தினேஷ், தலைவர்

கடந்த ஜனவரி மாதம், நம் சமூகத்தின் இருபெரும் தலைவர்களின் பிறந்த நாளை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கொண்டாடியது. ஜனவரி 14ம் தேதி அன்று, ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் 156வது பிறந்த தினத்தைக் கொண்டாடியும், ஜனவரி 25ம் தேதி அன்று மதுரை காந்தி என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களின் நினைவு நாளை அனுசரித்தும். இருபெரும் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அவர்களின் பாதையில், நாம் பயணிக்கவும், அவர்களை என்றென்றும் நினைவுகொள்ளவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செய்தனர்.

ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் ஜெயந்தி விழாவில், பரமக்குடி எல்.கே.டி. ஸௌராஷ்ட்ரா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டதை பெருமையாக கருதுகிறோம். அமைப்பின் தலைவர் திரு. நீ.சு. பெருமாள் அவர்கள், ஸ்ரீமான் எல்.கே. துளசிராம் அவர்களைப் பற்றி பல்வேறு தகவல்களைப் பரிமாறியதில், கேட்கும் நமக்கு ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 19ம் ஆண்டு விழா மற்றும் சேம்பர் துவக்க தின விழா கடந்த ஜனவரி மாதம் 26ம் தேதி கொண்டாடப்பட்டது. அங்கத்தினர்கள் பலர் திரளாக கலந்து கொண்டது மகிழ்ச்சியளித்தது. இந்த நிகழ்வில், கைத்தறியில் சாதனை படைத்த திரு. கே.ஆர். பாஸ்கரன் அவர்களை பாராட்டி மகிழ்ந்தோம். கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட திரு. சதீஷ் வெங்கடாசலபதி அவர்கள், கட்டணமின்றி ட்ரோன் மற்றும் ஏஐ தொழில்நுட்ப பயிற்சியை நம் சமூக மாணவர்களுக்கு அளிப்பதாகக் கூறியது பாராட்டத்தக்கது. சிறப்பு விருந்தினர் திரு. P.M. ராஜ்குமார் I.F.S., அவர்கள், நம் சமூக மக்கள் அரசியல், அதிகாரம், தொழில் இம்மூன்றிலும் ஸ்திரமாக முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தியதை நமது சேம்பர் ஏற்றுக் கொள்கிறது.

சிட்கான் 2026 தொழில் வர்த்தக மாநாடு வருகின்ற ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கிறது. அருணாச்சலாம் கமலாம்பாள் அரங்கில் தொழில் வர்த்தக கண்காட்சி நடைபெற இருக்கிறது. இங்கு 100க்கும் அதிகமான வர்த்தக அரங்குகள் அமைய இருக்கின்றன. தொழில் வர்த்தக மாநாடு நடைபெறும் இடம் விரைவில் அறிவிக்கப்படும். அங்கத்தினர்கள், பொது மக்கள் அனைவரும் தங்களின் ஆதரவை தொடர்ந்து அளித்திட சேம்பர் கேட்டுக்கொள்கிறது. நன்றி

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

**Advisors**

| | |
|---|---|
| K.K. Surendranath | 98409 88810 |
| T.K.D. Mohan | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**14.01.2026** – ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் 156வது ஜெயந்தி விழா நிகழ்ச்சி நமது சேம்பர்-ல் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தனர்களாக, பரமக்குடி LKT சௌராஷ்ட்ரா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**22.01.2026** – மதுரையில், ஜிஎஸ்டி கமிஷனர் திரு. சோமேஷ் திவாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்தில், சேம்பர் சார்பாக கலந்து கொண்டு கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

**26.01.2026** – நாட்டின் 77வது குடியரசு தின விழா நமது சேம்பர் வளாத்தில் கொண்டாடப்பட்டது. சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றினார். சிறப்பு விருந்தினராக திரு. Y.R. ஜனார்த்தனன் Scientist, DRDL(DRDO), Hyderabad, Project Director(Retd.), Helina & Dhruvastra அவர்களும், கௌரவ விருந்தினராக, திரு. நேதாஜி V. சுவாமிநாதன் Editor, Desiya Valimai (Monthly Magazine) Organizer, Nethaji Desiya Iyakkam அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள்.

**26.01.2026** – அன்று மாலை 6 மணிக்கு சேம்பர்-ன் 19ம் ஆண்டு விழா அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவில், சிறப்பு விருந்தினராக திரு. P.M. ராஜ்குமார் I.F.S., Retd. DFO. Dindigul அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. சதீஸ் வெங்கடாசலபதி Founder & MD., Indian Scientific Aerospace and Robotics அவர்களும் கலந்து கொண்டனர். விழாவிற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். தமிழ்நாடு அரசின் சிறந்த கைத்தறி நெசவாளருக்கான விருதைப் பெற்ற, பரமக்குடி திரு. K.R. பாஸ்கரன் அவர்களை நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் நினைவுப் பரிசை வழங்கி கௌரவித்தது.

**03.02.2026** – பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டம் Industrial Latest & Modern Safety Measures என்கிற தலைப்பில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திரு. R. சித்தார்த்தன் Asst. Director, Industrial Safety, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார். சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

கடந்த ஜனவரி மாத லாப் ஸமாச்சார் இதழை வெளியீடு செய்வதற்கு கப்பலூர் தொழிற்பேட்டை சங்கத் தலைவர் திரு. ரகுநாதராஜா அவர்களே நமது சேம்பர் அலுவலகத்திற்கு நேரடியாக வருகை தந்து வெளியீடு செய்து, பல்வேறு தொழில் குறித்த தகவல்களை தெரிவித்தது மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. அவர் நமது சேம்பர் மீது வைத்திருக்கும் பெருமதிப்பை உணர்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் சிட்கான் தொழில் வர்த்தக மாநாடு நிகழும் 2026ம் ஆண்டில் நடைபெற இருக்கிறது. மாநாட்டு மலர் பணிகளை, நமது லாப் ஸமாச்சார் குழுவினர் மேற்கொள்ள இருக்கின்றனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்ந்து ஆதரவு தந்து வரும் விளரம்பரதாரர்களை வரவேற்கிறோம். அதோடு, புதிதாக விளம்பரம் தர விரும்புவோர் எங்களைத் தொடர்புகொள்ளலாம். இந்த மலர் அனைவருக்கும் என்றென்றும் பயன்படும் வகையில் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சேம்பர்-ன் 19ம் ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அங்கத்தினர்கள் அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. நன்றி

## திருக்குறள்

**அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு**

**பொருள்:** (அற்ப புத்திக்காரன் சிறந்த அறிவுரைகளையும் அலட்சியம் செய்து, தன்னுடைய அற்ப அறிவே அதைவிடச் சிறந்ததாகப் பெருமை பேசிக்கொள்வான்) புல்லறிவாளன் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்படும் மெய்யறிவு, போதனைகளை அழித்துப் பேசி அதற்காகத் தன்னைத் தானே புகழ்ந்துகொள்வான்.

அதிகாரம் 85 புல்லறிவாண்மை(அற்ப புத்தி) அங்கவியல்

Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account

| | |
|---|---|
| Name | : Sourashtra Chamber of Commerce |
| Bank | : State Bank of India |
| Acct. No. | : 30134805614 |
| Branch | : Madurai City |
| IFSC | : SBIN0011544 |

SCAN & PAY






Best Compliments
BVK GROUP
Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation
Bala V Kutti
Founder & Chairman
4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.
Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

## மாதாந்திர தொழில் வர்த்தக கூட்டம்

# Industrial Latest & Modern Safety Measures




சௌராஷ்ட்ர சேம்பர்-ன் பிப்ரவரி மாத தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 03.02.2026 அன்று மாலை 6.30 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. Industrial Latest & Modern Safety Measures என்கிற தலைப்பில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு விளக்கமளிக்க சிறப்பு விருந்தினராக திரு. R. சித்தார்த்தன் Asst. Director, Industrial Safety, Madurai அவர்கள் கலந்து கொண்டு பேசினார்.


சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செயற்குழு உறுப்பினர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் சேலம் பாஸ்கர் அவர்கள் சிறப்பு விருந்தினரை முறையாக அறிமுகம் செய்தார். அதனையேற்று திரு. R. சித்தார்த்தன் அவர்கள் பேசினார்.

தொழிற்சாலைகளில் நடக்கும் பல்வேறு எதிர்பாரா அசம்பாவித சம்பவங்களும், அதிலிருந்து காத்துக் கொள்வதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நாம் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றி மிகத் தெளிவான முறையில் விளக்கம் அளித்தார்.

தொழிற்சாலைகள் மட்டுமின்றி, நிறுவனங்கள், அலுவலகங்கள், கடைகள், வீடுகளில் கூட நாம் எவ்வாறு பாதுகாப்புடன் செயல்பட வேண்டும் என்பது பற்றி விவரித்தார். மேற்கூறியவற்றில் எந்தெந்த வகையில் ஆபத்துக்கள் நேரலாம், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி தெளிவுபடுத்தினார்.

இவரது உரைக்குப்பிறகு, மத்திய பட்ஜெட் 2026 பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது. இது பற்றி திரு. பிரதீப் குமார் அவர்கள் பேசினார். முக்கியமாக மத்திய பட்ஜெட்-ல் அறிவிக்கப்பட்ட ஜிஎஸ்டி மாற்றங்கள், வரி செலுத்துவதில் எளிமையான நடைமுறை, தொழில் வாய்ப்புகள், நிதி ஒதுக்கீடுகள் பற்றி விளக்கமளித்தார். தமிழகத்தில், அரிய வகை தாதுப் பொருட்களுக்கான வழித்தடம் பற்றியும் பேசினார். முற்றிலும், எதிர்கால நோக்கத்தின் அடிப்படையில் இந்த பட்ஜெட் உள்ளதாகத் தெரிவித்தார்.



திரு. பிரதீப் குமார்

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் இந்த நிகழ்ச்சி ஒரு தெளிவை ஏற்படுத்தியது. கலந்து கொண்டு பேசிய சிறப்பு விருந்தினருக்கு சேம்பர் சார்பாக நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. மத்திய பட்ஜெட் 2026 பற்றிப் பேசிய திரு. பிரதீப் குமார் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, சேம்பர் துணைத்தலைவர் திரு. K.K. குபேந்திரன் அவர்கள், சிட்கான் 2026 பற்றி விவரித்து, அத்துடன் நன்றியுரையாற்றி நிறைவு செய்தார்.

## ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் 156வது ஜெயந்தி விழா நிகழ்ச்சி




ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 14ம் தேதி நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் ராஷ்ட்ரபந்து எல்.கே. துளசிராம் அவர்களின் ஜெயந்தியை கொண்டாடி வருகிறது. அவரது நினைவை போற்றும் வகையிலும், அடுத்தத் தலைமுறையினருக்கு அவரது சாதனைகளை கொண்டு செல்லும்வகையிலும் இந்த நிகழ்ச்சி கடந்த 14.01.2026 மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினர்களாக பரமக்குடி L.K.T. சௌராஷ்ட்ரா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகளான, தமிழ்ச்செம்மல் விருதாளர், தலைவர் திரு. N.S. பெருமாள், துணைத் தலைவர் திரு. D.K. ரவீந்திரநாத், செயலாளர் திரு. V.R. ஜெயகிருஷ்ணா மற்றும் பொருளாளர் திரு. M.P. ராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு கலந்து கொண்ட அனைவரும் ராஷ்ட்ரபந்து L.K. துளசிராம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி வணங்கினர். இந்த நிகழ்வில் மூத்த பத்திரிக்கையாளர் திரு.V.N. சாமி அவர்களும் கலந்து கொண்டு பேசினார்.

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# மத்திய பட்ஜெட் 2026 - முக்கிய அறிவிப்புகள்

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1, 2026 அன்று நாடாளுமன்றத்தில் 2026-27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார். 'விக்சித் பாரத் 2047' (வளர்ச்சியடைந்த இந்தியா) என்ற இலக்கை நோக்கிய பயணத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக இந்த பட்ஜெட் கருதப்படுகிறது.

**முக்கிய நிதி நிலவரங்கள்** (Fiscal Highlights)

- **மூலதனச் செலவு** (Capex): உட்கட்டமைப்பு வளர்ச்சியை ஊக்குவிக்க மூலதனச் செலவினம் ₹12.2 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது (கடந்த ஆண்டை விட 11.4% அதிகம்).
- **நிதிப்பற்றாக்குறை** (Fiscal Deficit): 2026-27 நிதியாண்டில் நிதிப்பற்றாக்குறை இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4.3% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- **பொருளாதார வளர்ச்சி**: 2026-27ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.8% முதல் 7.2% வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**வருமான வரி மற்றும் நேரடி வரிகள்** (Income Tax & Direct Taxes)

இந்த பட்ஜெட்டில் வருமான வரி அடுக்குகளில் (Tax Slabs) மாற்றங்கள் ஏதும் செய்யப்படவில்லை. இருப்பினும், வரி நடைமுறைகளை எளிமையாக்க புதிய அறிவிப்புகள் வெளியாகியுள்ளன:

- **புதிய வருமான வரி சட்டம் 2025**: ஏப்ரல் 1, 2026 முதல் புதிய வருமான வரி சட்டம் நடைமுறைக்கு வரும். இது வரி படிவங்களை எளிமையாக்கி, வரி செலுத்துவோரின் சிரமத்தை குறைக்கும்.
- **திருத்தப்பட்ட ரிட்டர்ன்** (Revised Return): பிழைகளைத் திருத்தி ரிட்டர்ன் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- **பங்கு திரும்பப் பெறுதல்** (Buyback): பங்குகளைத் திரும்பப் பெறுவதன் மூலம் கிடைக்கும் லாபம் இனி 'மூலதன ஆதாய வரியின்' (Capital Gains Tax) கீழ் வரும்.
- **பங்குச்சந்தை வரி** (STT): வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த 'Futures' மற்றும் 'Options' மீதான செக்யூரிட்டிஸ் பரிவர்த்தனை வரி (ரிவீவீ) உயர்த்தப்பட்டுள்ளது.

**துறைவாரியான முக்கிய அறிவிப்புகள்**

- **ரயில்வே**: சென்னை—பெங்களூரு, ஐதராபாத்—சென்னை உட்பட 7 புதிய அதிவேக ரயில் வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- **விவசாயம்**: தென்னை, முந்திரி, சந்தனம் போன்ற அதிக மதிப்புள்ள பயிர்களை ஊக்குவிக்க 'பாரத்-விஸ்டார்' (Bharat-VISTAAR) என்ற புனூா தளம் அறிமுகப்படுத்தப்படும்.
- **கல்வி மற்றும் வேலைவாய்ப்பு**: 15,000 பள்ளிகளில் அனிமேஷன் மற்றும் கேமிங் (AVGC) ஆய்வகங்கள் அமைக்கப்படும்.
- **சுகாதாரம்**: வட இந்தியாவில் ஹிஞானிகூஷிபுஹிறீ 2.0 போன்ற புதிய மனநல ஆராய்ச்சி மையங்கள் மற்றும் 3 புதிய ஆயுர்வேத மருத்துவக் கழகங்கள் (All India Institutes of Ayurveda) அமைக்கப்படும்.
- **தொழிற்துறை**: தமிழ்நாடும் உள்ளடங்கிய கடலோர மாநிலங்களில் 'அரிய வகை கனிம வழித்தடங்கள்' (Rare Earth Corridors) உருவாக்கப்படும்.

**பொதுமக்களுக்கு லாபகரமானவை (மலிவாகும் பொருட்கள்)**

சுங்க வரி மாற்றங்களால் சில பொருட்களின் விலை குறைய வாய்ப்புள்ளது:

- **புற்றுநோய் மருந்துகள்**: 17 வகையான புற்றுநோய் மருந்துகளுக்கு முழுமையான சுங்க வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- **வெளிநாட்டு பயணம்/கல்வி**: வெளிநாட்டு கல்வி மற்றும் மருத்துவ செலவுகளுக்கான TCS வரி 5%-லிருந்து 2%-ஆக குறைக்கப்பட்டுள்ளது.
- **செல்போன் உதிரிபாகங்கள் & மின்சாதனங்கள்**: பேட்டரி தயாரிப்புக்கான லித்தியம்-அயன் பொருட்கள் மற்றும் சோலார் கண்ணாடி உதிரிபாகங்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளது

# தமிழ்நாட்டிற்கு கிடைத்துள்ள நன்மைகள் மற்றும் அறிவிப்புகள்

**1. போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு**

- **ரயில்வே ஒதுக்கீடு:** தமிழக ரயில்வே திட்டங்களுக்காக சாதனை அளவாக ₹7,611 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 14.9% அதிகம்.
- **அதிவேக ரயில்** (High-Speed Rail): சென்னை - பெங்களூரு மற்றும் சென்னை - ஐதராபாத் ஆகிய இரண்டு முக்கிய அதிவேக ரயில் வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- **சென்னை மெட்ரோ:** சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டப் பணிகளுக்காக சுமார் ₹8,000 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

**2. தொழில் மற்றும் கனிம வளம்**

அரிய வகை கனிம வழித்தடம்: தமிழ்நாட்டின் கடற்கரை பகுதிகளில் உள்ள கனிம வளங்களைப் பயன்படுத்தி, மின்சார வாகனங்கள் (EV) மற்றும் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான 'Rare Earth Minerals' பிரித்தெடுக்கும் மையம் தமிழகத்தில் அமையும்.

- **பொருளாதார மண்டலங்கள்:** கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்கள் 'நகர பொருளாதார மண்டலங்களாக' (City Economic Regions) மாற்றப்பட வாய்ப்பு உள்ளது. இதற்கு ஒரு நகரத்திற்கு ₹5,000 கோடி வரை நிதி கிடைக்க வாய்ப்புள்ளது.

**3. விவசாயம் மற்றும் வாழ்வாதாரம்**

- **தென்னை விவசாயம்:** தமிழகத்தில் தேங்காய் உற்பத்தியைப் பெருக்க 'தேசிய தென்னை மேம்பாட்டுத் திட்டம்' மூலம் பழைய மரங்களுக்குப் பதில் அதிக மகசூல் தரும் கன்றுகள் நட நிதி உதவி வழங்கப்படும்.
- **ஏற்றுமதி பயிர்கள்:** முந்திரி, கோகோ மற்றும் சந்தன மரப் பயிர்களுக்குத் தனி ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

**4. சுற்றுலா மற்றும் கலாச்சாரம்**

- **ஆதிச்சநல்லூர்:** தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி தளம், 15 முக்கிய கலாச்சார மையங்களில் ஒன்றாக மேம்படுத்தப்படும்.
- **சுற்றுலாத் திட்டங்கள்:** பழவேற்காடு ஏரி (Pulicat Lake) பறவைகள் சரணாலயம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள பொதிகை மலை பகுதிகளில் மலையேற்றச் சுற்றுலாத் திட்டங்கள் மேம்படுத்தப்படும்.

**5. கல்வி மற்றும் மருத்துவம்**

- **ஆயுர்வேத நிறுவனம்:** தேசிய அளவில் அறிவிக்கப்பட்டுள்ள 3 புதிய அகில இந்திய ஆயுர்வேத மருத்துவக் கழகங்களில் (All India Institutes of Ayurveda) ஒன்று தமிழகத்திற்கு கிடைக்க வாய்ப்புள்ளது.
- **வேலைவாய்ப்பு:** தமிழகத்தில் உள்ள 50-க்கும் மேற்பட்ட ஐடிஐ-கள் (ITI) தொழில்நுட்ப மேம்பாட்டிற்காகத் தரம் உயர்த்தப்படும்..

# மத்திய பட்ஜெட்-ல் ஜிஎஸ்டி பற்றிய முக்கிய அறிவிப்புகள்

**1. சிஜிஎஸ்டி சட்டத்தின் 15(3) மற்றும் 34 ஆகிய பிரிவுகளில் திருத்தம் – விற்பனைக்குப் பிந்தைய தள்ளுபடிகள் Amendment to Sections 15(3) and 34 of the CGST Act – Post-Sale Discounts**

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) சட்டம், 2017-ல் மிக முக்கியமான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. 56-வது GST கவுன்சில் கூட்டத்தின் பரிந்துரைப்படி, நிதிச் சட்டம் 2026 (Finance Act, 2026) மூலம் இந்தத் திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திருத்தங்களின் முக்கிய அம்சங்கள் இதோ:

- ✓ **முன் ஒப்பந்தம் தேவையில்லை:** பிரிவு 15(3)(b)-ன் கீழ், விற்பனைக்குப் பிந்தைய தள்ளுபடிகளுக்கு (Post-sale discounts) இனி முன்கூட்டியே போடப்பட்ட ஒப்பந்தமோ அல்லது குறிப்பிட்ட விலைப்பட்டியலுடன் (Invoice) நேரடித் தொடர்போ தேவையில்லை.
- ✓ **மதிப்பீட்டு முறை மாற்றம்:** தள்ளுபடி மதிப்பானது, பிரிவு 34-ன் கீழ் வழங்கப்பட்ட கிரெடிட் நோட் (Credit Note) அடிப்படையில் அமையும்.
- ✓ ITC **திரும்பப் பெறுதல்:** வாங்குபவர் (Recipient) அந்தத் தள்ளுபடிக்குரிய உள்ளீட்டு வரி வரவை (Input Tax Credit) முறைப்படி திரும்பச் செலுத்தினால் (Reverse) மட்டுமே இந்தச் சலுகை கிடைக்கும்.
- ✓ **ஒருங்கிணைந்த சட்டப்பிரிவுகள்:** மதிப்பீடு (Section 15) மற்றும் கிரெடிட் நோட் (Section 34) ஆகியவற்றுக்கு இடையே சட்டப்பூர்வ முரண்பாடுகளைத் தவிர்க்க, பிரிவு 34-ல் இதற்கான தெளிவான குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் வணிக ரீதியான தள்ளுபடிகள் மற்றும் ஆண்டு இறுதி ஊக்கத்தொகைகள் (Year-end rebates) தொடர்பான சட்ட சிக்கல்களைப் பெருமளவு குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2. பிரிவு 54(6) இல் திருத்தம் - தலைகீழ் வரி அமைப்புக்கான தற்காலிகத் திரும்பப் பெறுதல் Amendment to Section 54(6) - Provisional Refund for Inverted Duty Structure**

நிதிச் சட்டம் 2026 (Finance Act, 2026) மூலம் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தம், வணிகர்களின் பணப்புழக்கத்தை (Liquidity) அதிகரிக்க உதவும் ஒரு மிக முக்கியமான நடவடிக்கையாகும்.

இந்தத் திருத்தத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

- ✓ **90% தற்காலிக ரீஃபண்ட்** (Provisional Refund): முன்பு பூஜ்ஜிய வரி விதித விநியோகங்களுக்கு (Zero-rated supplies) மட்டுமே வழங்கப்பட்டு வந்த 90% தற்காலிக ரீஃபண்ட் வசதி, இப்போது தலைகீழ் வரி அமைப்பு (Inverted Duty Structure) முறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- ✓ **பிரிவு 54(6)-ல் மாற்றம்:** இதற்காக CGST சட்டத்தின் பிரிவு 54, உட்பிரிவு (6)-ல் முறையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
- ✓ **விரைவான செயல்முறை:** தகுதியுள்ள வரி செலுத்துவோர், தங்கள் ரீஃபண்ட் கோரிக்கையில் 90% தொகையை தற்காலிக அடிப்படையில் விரைவாகப் பெற முடியும். மீதமுள்ள 10% தொகை ஆவண சரிபார்ப்பிற்குப் பிறகு வழங்கப்படும்.
- ✓ **பயன்கள்:** இதன் மூலம் உற்பத்தித் துறையில் உள்ள நிறுவனங்கள், குறிப்பாக உள்ளீட்டுப் பொருட்களுக்கு (Inputs) அதிக வரி செலுத்தி, இறுதிப் பொருளுக்குக் குறைவான வரி வசூலிக்கும் நிறுவனங்கள், தங்கள் மூலதனம் முடங்குவதைத் தவிர்க்கலாம்.
- ✓ **56-வது** GST **கவுன்சில் பரிந்துரை:** இந்த மாற்றம் செப்டம்பர் 2025-ல் நடைபெற்ற 56-வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டு, தற்போது சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளது.

**3. வரி செலுத்தி ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு பணத்தைத் திரும்பப் பெறுதல் - Refund on Export of Goods with Payment of Tax**

மத்திய சரக்கு மற்றும் சேவை வரி (CGST) சட்டம், 2017-ன் பிரிவு 54(14)-ல் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் திருத்தம், சிறிய அளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு (Exporters) மிகப்பெரிய ஊக்கத்தை அளிக்கும்.

நிதிச் சட்டம் 2026 (Finance Act, 2026) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த மாற்றத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- ✓ **குறைந்தபட்ச வரம்பு நீக்கம்:** முன்பு ₹1,000-க்கும் குறைவான ரீஃபண்ட் தொகையைக் கோர முடியாது என்ற கட்டுப்பாடு இருந்தது. தற்போது, வரியுடன் கூடிய ஏற்றுமதி (Export with payment of tax) செய்யும் நிகழ்வுகளில் இந்த ₹1,000 வரம்பு நீக்கப்பட்டுள்ளது.
- ✓ **பயனாளிகள்:** இந்த மாற்றம் குறிப்பாக கூரியர் (Courier), தபால் மற்றும் ஈ-காமர்ஸ் (e-commerce) மூலம் சிறிய அளவிலான குறைந்த மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்யும் MSME-களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.
- ✓ **இதர ரீஃபண்டுகளுக்கு மாற்றம் இல்லை:** இந்த விலக்கு வரியுடன் கூடிய ஏற்றுமதிக்கு மட்டுமே பொருந்தும். உள்நாட்டுத் தலைகீழ் வரி அமைப்பு (Inverted Duty Structure) அல்லது சேவை ஏற்றுமதி போன்ற இதர ரீஃபண்ட் கோரிக்கைகளுக்கு ₹1,000 குறைந்தபட்ச வரம்பு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.
- ✓ **பணப்புழக்கம் அதிகரிப்பு:** சிறு ஏற்றுமதியாளர்களின் மிகச்சிறிய ரீஃபண்ட் தொகைகளும் இப்போது நிராகரிக்கப்படாமல் முறையாக வழங்கப்படும் என்பதால், அவர்களின் பணப்புழக்கம் (Cash Flow) மேம்படும்.

**நிதிச் சட்டம் 2026-ன் கீழ் உள்ள இதர முக்கிய மாற்றங்கள்:**

- ✓ பிரிவு 15 & 34: விற்பனைக்குப் பிந்தைய தள்ளுபடிகளை கிரெடிட் நோட் மூலம் எளிமைப்படுத்துதல்.
- ✓ பிரிவு 54(6): தலைகீழ் வரி அமைப்பு (Inverted Duty Structure) முறைக்கும் 90% தற்காலிக ரீஃபண்ட் வசதியை நீட்டித்தல்.
- ✓ பிரிவு 101B: தேசிய மேல்முறையீட்டு அமைப்பு (NAAAR) அமையும் வரை இடைக்கால மேல்முறையீட்டு ஏற்பாடுகளைச் செய்தல்.

**4. ஜிஎஸ்டி மேல்முறையீட்டு விதிகளில் திருத்தம்-பிரிவுகள் 101A மற்றும் 101B - Amendment to GST Appellate Provisions – Sections 101A and 101B**

இந்த சட்டத் திருத்தம் முன்கூட்டிய தீர்ப்புக்கான தேசிய மேல்முறையீட்டு ஆணையம் (NAAAR) அமைக்கப்படுவதில் நிலவும் தாமதத்தை சரிசெய்யக் கொண்டுவரப்பட்டுள்ளது.

நிதிச் சட்டம் 2026 (Finance Act, 2026)-ன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மாற்றத்தின் முக்கிய அம்சங்கள் (தமிழ் விளக்கம்):

- ✓ **இடைக்கால மேல்முறையீட்டு ஏற்பாடு:** முன்கூட்டிய தீர்ப்புக்கான தேசிய மேல்முறையீட்டு ஆணையம் (NAAAR) இன்னும் முறைப்படி அமைக்கப்படவில்லை. அதுவரை, ஏற்கனவே நடைமுறையில் உள்ள

- ✓ ஒரு ஆணையம் அல்லது தீர்ப்பாயத்திற்கு (Tribunal) மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தை அரசு வழங்க முடியும்.
- ✓ **புதிய உட்பிரிவு** 101A(1A): இந்தப் புதிய உட்பிரிவு, 'தற்போதுள்ள ஆணையம்' (Existing Authority) என்பதில் சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்ட தீர்ப்பாயங்களும் அடங்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.
- ✓ **பொருந்தாத விதிகள்:** ஒரு தீர்ப்பாயத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப்படும் போது, பிரிவு 101A-ன் உட்பிரிவுகள் (2) முதல் (13) வரையிலான விதிகள் (அதாவது ஆணையத்தின் அமைப்பு, நியமனம் தொடர்பான விதிகள்) அந்தத் தீர்ப்பாயத்திற்குப் பொருந்தாது.
- ✓ **நோக்கம்:** வெவ்வேறு மாநிலங்களில் ஒரு வரி செலுத்துவோருக்கு வழங்கப்பட்ட முரண்பாடான தீர்ப்புகளால் (Conflicting Advance Rulings) ஏற்படும் சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், மேல்முறையீட்டு நடைமுறை தேக்கமடையாமல் இருப்பதை உறுதி செய்யவும் இந்த மாற்றம் உதவும்.
- ✓ **நடைமுறைக்கு வரும் நாள்:** இந்தத் திருத்தம் ஏப்ரல் 1, 2026 முதல் அமலுக்கு வருகிறது.

இந்த மாற்றத்தின் மூலம், வரி செலுத்துவோர் தங்கள் மேல்முறையீடுகளை இனி நீண்ட காலம் காத்திருக்காமல் விரைவாகத் தீர்த்துக் கொள்ள முடியும்.

**5. இடைத்தரகு சேவைகளுக்கான விநியோக இடம் - Place of Supply for Intermediary Services**

ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி (IGST) சட்டம், 2017-ன் பிரிவு 13(8)(b) நீக்கப்பட்டுள்ளது. நிதிச் சட்டம் 2026 (Finance Act, 2026) மூலம் கொண்டுவரப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தம், இந்திய சேவை ஏற்றுமதியாளர்களுக்கு (Service Exporters) மிகப்பெரிய நிம்மதியை அளித்துள்ளது. இந்தத் திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் மற்றும் விளைவுகள் பின்வருமாறு:

- ✓ **இடைத்தரகர் சேவைகளுக்கான புதிய விதி** (New Rule for Intermediary Services): முன்பு, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் இந்திய இடைத்தரகர்களின் (Intermediaries/Brokers) 'வழங்கல் இடம்' (Place of Supply) இந்தியாவாகவே கருதப்பட்டது. இதனால் அவர்கள் 18% GST செலுத்த வேண்டியிருந்தது. இனி, பிரிவு 13(2)-ன் படி, சேவை பெறுபவரின் இருப்பிடமே (வெளிநாடு) வழங்கல் இடமாகக் கருதப்படும்.
- ✓ **ஏற்றுமதி அங்கீகாரம்** (Export Status): இந்த மாற்றத்தின் மூலம், இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் இடைத்தரகர் சேவைகள் இனி முறையான 'சேவை ஏற்றுமதியாக' (Export of Services) கருதப்படும். இதனால் இந்தச் சேவைகளுக்கு வரி விலக்கு (Zero-rated supply) கிடைக்கும்.
- ✓ **பணத்தைத் திரும்பப் பெறுதல்** (Refund): இந்திய சேவை வழங்குநர்கள் தாங்கள் செலுத்திய உள்ளீட்டு வரி வரவை (Input Tax Credit - ITC) இனி ரீஃபண்டாகப் பெற முடியும். இது அவர்களின் உலகளாவிய போட்டித்திறனை (Global Competitiveness) அதிகரிக்கும்.
- ✓ **தலைகீழ் வரி முறை** (Reverse Charge Mechanism - RCM): ஏற்றுமதியாளர்களுக்கு இது சாதகமாக இருந்தாலும், வெளிநாட்டு இடைத்தரகர்களிடமிருந்து சேவை பெறும் இந்திய நிறுவனங்கள், இனி அந்தச் சேவைகளுக்கு RCM அடிப்படையில் GST செலுத்த வேண்டியிருக்கும்.
- ✓ **சட்ட சிக்கல்கள் குறைவு:** இந்தத் திருத்தம் பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த சுமார் ₹3,300 கோடி மதிப்பிலான சட்டப் போராட்டங்களுக்கு (Litigations) முற்றுப்புள்ளி வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ **நடைமுறைக்கு வரும் நாள்:** இந்தத் திருத்தம் ஏப்ரல் 1, 2026 முதல் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## வாழ்த்துகள்

மதுரை மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கிக் கொண்டு இருக்கும் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி மதுரை மாவட்டக் கிளை நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தேர்வு சென்ற 11.01.2026 அன்று நடைபெற்றது. அதில் நமது சேம்பர் செயற்குழு உறுப்பினர் மரு. A.R. கணேசன் அவர்கள் 3வது இடத்தை பெற்றமைக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நற்சான்றிதழை வழங்கி கௌரவித்தார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### மருத்துவ டிப்ஸ்

- மார்பு சளி தீர, கோலை கிழங்கு சாறு 10மி.லி., குடித்து வரலாம்.
- முற்றிய வெண்டைக்காய் சூப் செய்து குடிக்கலாம்.
- வெந்தயக்கீரை சமைத்து சாப்பிட்டு வர இருமல் குணமாகும்.


## மருத்துவ தகவல்

**ஜயன்ட் செல் ட்யூமர் என்பது கேன்சரா? இதற்கு சிகிச்சை உண்டா?**

ஜயன்ட் செல் ட்யூமர் என்பது எலும்பில் உள்ள அணுக்களில் இருந்து உற்பத்தி ஆகிறது. இந்த கட்டி எலும்பை கரையச் செய்யும் தன்மை உள்ளது. பெரும்பாலும் இந்நோய் பரவுவதில்லை. ஆனால் ஆபத்து கிடையாது. இதற்கான சிகிச்சையாக அந்த கட்டியை அகற்றி அந்த இடத்தில் உலோகத்திலான தகடை பொருத்த வேண்டும். அவ்வாறு செய்தால் முழுமையாக குணமடையும் வாய்ப்புள்ளது.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை & வேல் சிறப்பு எழும்பியல் மையம்
செல்: 93442 46436

## இரங்கல்



சாரங்கபாணி
மறைவு
25.01.2026

நமது சேம்பர்-ன் ஆண்டு சந்தா உறுப்பினர் குற்றாலம் சாந்தி இல்லம் திரு. சாரங்கபாணி அவர்கள் 25.01.2026 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சேம்பர் துவக்க காலத்தில் ஆண்டு சந்தா உறுப்பினராக தொடர்ந்தவர், இன்று வரையில் தொடர்ந்து நம்முடன் பயணித்து வருபவர். அவரது பிரிவு மிகுந்த மனவருத்தத்தை அளிக்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை சேம்பர் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது ஆன்மா எல்லாம் வல்ல எம்பெருமான் திருவடி சேர வேண்டுகிறோம்.

# மைக்ரோகிரீன் வளர்ப்பு முறை மற்றும் பயன்கள்

வீட்டுக்குத் தேவையான கீரைகள் மற்றும் காய்கறிகளை வீட்டுக்குள்ளேயே பயிர் செய்யும் மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பு முறை தற்போது அதிக அளவில் பரவி வருகிறது. மைக்ரோகிரீன் வளர்ப்பு எளிதானது தான் என்றாலும் அதனை சரியான முறையில் பராமரிப்பதன் மூலம் மட்டுமே அதற்குரிய பலன்களை நம்மால் பெற முடியும். மைக்ரோகிரீன் வளர்ப்பு பற்றிய சந்தேகங்களையும், அதனை எப்படி செய்ய வேண்டும் என்பதையும் இந்த பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.

மாடித் தோட்டம் அமைப்பதை பலரும் எப்படி விரும்பினார்களோ அதேபோல் தற்போது பலராலும் விரும்பி செய்யப்படும் விஷயம் என்றால் அது மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பது தான். அதிலும், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் தங்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை பெறுவதற்கு மைக்ரோகிரீன் வளர்ப்பை விரும்புகின்றனர். மைக்ரோகிரீன்ஸ் முறையில் வளர்க்கப்படும் கீரைகள் மற்றும் காய்கறிகளில் அதிக அளவு ஊட்டச்சத்து நன்மைகள் உள்ளது. மைக்ரோகிரீன் முறையில் வளர்க்கப்படும் கடுகு, பெருஞ்சீரகம், வெந்தயம், கோதுமை போன்ற தானியங்களின் கீரைகள், காய்கறிகளை பல்வேறு உணவுகளில் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். வீடுகளில் மைக்ரோகிரீன் முறையில் விதைகளை நடவு செய்து வளர்ப்பது எப்படி என்பதை தெரிந்து கொள்வோம்.

**மைக்ரோகிரீன் கீரைகளை எதற்கு பயன்படுத்தலாம்?**

உணவகங்கள் மற்றும் பேக்கரிகளில் மைக்ரோகிரீன் கீரைகளை பயன்படுத்துவது தற்போது அதிகரித்து வருகிறது. பொதுவாக மைக்ரோகிரீன் வகை கீரைகளை நேரடியாக அடுப்பில் சமைக்க மாட்டார்கள். அவைகளை, உணவுகளின் மேல் தூவவும், சாலட்டுகள், சாண்ட்விச்கள் போன்றவற்றில் சேர்த்து அதனுடைய சுவையை அதிகரிக்கவுமே பயன்படுத்துவர். அதிலும் குறிப்பாக கார்னிஷிங்கில் மைக்ரோகிரீன் கீரைகளுக்கு என்று தனி இடம் உண்டு. அதேபோல் மைக்ரோகிரீன் முறையில் முள்ளங்கி, பிரக்கோலி போன்ற காய்கறிகளையும் நாம் வளர்க்கலாம்.

மைக்ரோகிரீன்களை வீட்டிலேயே சிறிய இடத்தில் குறைந்த செலவில் எளிதாக வளர்க்கலாம். மைக்ரோகிரீன்களை சூரிய ஒளியில் தான் வளர்க்க வேண்டும் என்பது இல்லை. இருப்பினும், வீட்டுக்குள் வளர்க்கும் மைக்ரோகிரீன் கீரைகள் மற்றும் செடிகளின் மீது சூரிய ஒளிபடுவதன் மூலம் அவை செழித்து வளரும்.

**மைக்ரோகிரீன்கள் வளர்க்க உதவும் படிநிலைகள் அதனை பராமரிப்பது எப்படி?**

**கொள்கலனை தேர்வு செய்தல் :** வெந்தயம், கடுகு, பெருஞ்சீரகம், முள்ளங்கி, பிரக்கோலி போன்றவற்றை மைக்ரோகிரீன் முறையில் வளர்ப்பதற்கு முதலில் அதற்குத் தகுந்த கொள்கலன்கள் அல்லது அகன்ற பாத்திரங்களைத் தேர்வு செய்ய வேண்டும். பிங்கானால் ஆன பாத்திரங்கள், கண்ணாடியில் ஆன பாத்திரங்கள் அல்லது மண்ணால் ஆன நடவு பாத்திரங்களை தேர்வு செய்வது மிகவும் நல்லது.

**மண்ணை நிரப்புதல்:** நீங்கள் தேர்வு செய்த பாத்திரத்தில் கடைகளில் கிடைக்கும் ஊட்டமேற்றப்பட்ட மண்ணை நிரப்பவும். பின்பு அந்த மண்ணில் தண்ணீரை ஸ்ப்ரே செய்து நன்றாகக் கலக்கவும். மண்ணில் அதிக அளவு நீரையும் ஊற்றி விடக்கூடாது.

**விதைகளை தெளிக்கவும்**

நீர்த்தெளித்து கலந்த மணலின் மேல் நீங்கள் வளர்க்க விரும்பும் தானியங்கள் அல்லது செடிகளின் விதைகளை மேற்பரப்பில் தூவி லேசாக அழுத்தவும். விதைகளை தூவிய பின் மண்ணை கலந்து விடக்கூடாது. தூவிய விதைகளின் மேல் மீண்டும் சிறிதளவு மண்ணைத் தூவி மேற்பரப்பை லேசாக மூடவும். விதைகளின் மேல் அதிக அளவு மண்ணையும் தூவி விடக்கூடாது என்பதை நினைவில் கொள்ளவும். பின்பு தூவிய மணலின் மேல் ஸ்ப்ரே பாட்டில் மூலம் தண்ணீரை ஸ்ப்ரே செய்யவும். இதன்மூலம் விதைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கும்.

**விதைகளை மண் கொண்டு மூடவும்**

மணல் பரப்பின் மேல் விதைகளை தூவிய பின்பு அதன் மேல் தண்ணீர் தெளித்துவிட்டு மூடி வைக்க வேண்டும். வாய் அகன்ற பாத்திரங்களில் நீங்கள் விதைகளை நடவு செய்துள்ளீர் எனில், அதனை குப்பைகளை சேகரிக்கும் கருப்பு நிற பாலிதீன் கவர் கொண்டு மூடலாம். மண் பாத்திரங்கள் அல்லது பீங்கான் பாத்திரங்களின் நீங்கள் விதைகளை நடவு செய்துள்ளீர் எனில் அதற்குரிய மூடிக்கொண்டு மூடி வீட்டுக்குள்ளேயே சூரிய ஒளிபடும் இடத்தில் வைக்கலாம்.

**தேவையான அளவு தண்ணீர் மற்றும் சூரிய ஒளி**

விதைகளை நடவு செய்த பின் மண்ணை ஈரப்பதத்துடன் வைத்திருக்க ஒரு ஸ்ப்ரே பாட்டில் தண்ணீரைக் கொண்டு அவ்வப்போது ஸ்ப்ரே செய்யவும். மைக்ரோகிரீன்கள் வளர அதிக அளவில் சூரிய ஒளி தேவை இல்லை என்றாலும் போதுமான அளவு வெளிச்சம் தேவை. நடவு செய்த மைக்ரோகிரீன் விதைகள் நிறைந்த பாத்திரத்தை ஒரு நாளைக்கு குறைந்தது 3 முதல் 4 மணி நேரங்களுக்கு சூரிய ஒளிபடும்படி வைக்கலாம். அல்லது வீட்டுக்குள் சூரிய ஒளிபடும் இடத்தில் வைக்க வேண்டும். அதிக நேரமும் சூரிய ஒளியில் இருக்கக்கூடாது.

**விதைகள் முளைப்பு**

மைக்ரோகிரீன் முறையில் விதைகளை நடவு செய்த இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின் சிறிய தளிர்களுடன் கூடிய முளைப்புகளை நீங்கள் பார்க்க முடியும். முளைத்து வந்த தளிர்களை பசுமையாக வைத்திருக்க அடிக்கடி தண்ணீர் ஸ்ப்ரே செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளவும்.

***அறுவடை :*** நீங்கள் மைக்ரோகிரீன் முறையில் நடவு செய்த விதை எந்த விதை என்பதை பொறுத்து அதனுடைய அறுவடை மாறுபடும். உதாரணமாக, நீங்கள் கடுகு, பெருஞ்சீரகம் போன்ற தானியங்களின் விதைகளை விதைப்பு செய்திருந்தால் அவை 7 முதல் 14 நாட்களுக்குள் அறுவடைக்கு தயாராகி விடும். காய்கறிகள் போன்றவற்றை நீங்கள் மைக்ரோகிரீன் முறையில் விதைத்திருந்தால் அதற்கு அந்த காய்கறிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப அறுவடை மாறுபடும்.

**மைக்ரோகிரீன் கீரைகள், காய்களை உணவில் சேர்த்துக் கொள்வது எப்படி?**

மைக்ரோகிரீன் முறையில் உருவாக்கப்பட்ட கீரைகள் மற்றும் காய்கறிகளை சாலட்டுகள், சூப்புகளில் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். ஸ்மூத்திகள் மற்றும் ஜூஸ்களில் கூட மைக்ரோகிரீன் கீரைகள் மற்றும் காய்கறிகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் உங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை பெற முடியும். கடுகுக்கீரை, வெந்தயக்கீரை போன்ற மைக்ரோகிரீன் முறையில் வளர்க்கப்பட்ட கீரைகளை உணவுகளின் மேல் கார்னிஷிங் செய்ய பயன்படுத்தலாம். பர்கர், சாண்ட்விச், டாக்கோவிலும் மைக்ரோகிரீன் கீரைகளை சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**இறுதியாக,**

மைக்ரோகிரீன் முறையில் கீரைகள் மற்றும் காய்கறிகளை வளர்ப்பது எளிதாகவும், சிறிய அளவிலும் இருந்தாலும் அதன் மூலம் அதிக அளவில் பலரும் வருமானம் ஈட்டி வருகின்றனர். இதனை குடிசைத் தொழிலாகவும் பலர் செய்து வருகின்றனர். அதிலும், குறிப்பாக நகரத்தில் இருப்பவர்களுக்கு வருமானம் தரும் விஷயமாக மைக்ரோகிரீன்ஸ் வளர்ப்பு உள்ளது. தற்போது விவசாயிகள் கூட இதுபோன்ற மைக்ரோகிரீன் முறை விதைப்பை பெரிய அளவில் செய்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.




# ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 19ம் ஆண்டு விழா

ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் 19ம் ஆண்டு விழா 26.01.2026 அன்று மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அருணாச்சலம் கமலாம்பாள் அரங்கில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திரு. P.M. ராஜ்குமார் I.F.S., Retd. DFO. Dindigul அவர்களும், கௌரவ விருந்தினராக திரு. சதீஸ் வெங்கடாசலபதி Founder & MD., Indian Scientific Aerospace and Robotics அவர்களும் கலந்து கொண்டனர். விழாவிற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.

விழா துவங்குவதற்கு முன்பாக, பரமக்குடி விஷ்வேஷ் நாட்டியாலயாவின் சார்பாக பள்ளி மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவிகளை ஊக்குவிக்கும் வகையாக, வெங்கட் ஸ்க்ரீன் திரு. T.N. சூரியபிரகாஷ் மற்றும் பானு ப்ளாஸ்டிக் திரு. V.R. சேகர் ஆகியோர் ஊக்கத்தொகை வழங்கினார்கள். இதனையடுத்து விழாவில் பங்கேற்ற செயற்குழு உறுப்பினர்களின் இல்லத்தரசிகளின் கரங்களால் குத்துவிளக்கு ஏற்றப்பட்டது. இதனையடுத்து நிகழ்ச்சி துவங்கியது.

சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப்பேசினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் கடந்த ஓராண்டில் நடைபெற்ற சேம்பர் நிகழ்ச்சிகள் பற்றி காணொலி காட்சி வாயிலாக விளக்கினார்.

இந்த நிகழ்வையடுத்து, ஸௌராஷ்ட்ர பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் முதல் இடம் பெற்ற மாணவிகள் K.V. தீபலக்ஷ்மி மற்றும் J.S. சுபஸ்ரீ ஆகியோருக்கு E.A. வெங்கட்ராமய்யர் தர்மம் டிரஸ்ட்-ன் சார்பாக கல்வி உதவி வழங்கப்பட்டது.




திரு. K.R. பாஸ்கரன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

இதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு, தமிழ்நாடு அரசின் சிறந்த கைத்தறி நெசவாளருக்கான விருதைப் பெற்ற, பரமக்குடியில் வசிக்கும், நம் சமூகத்தைச் சேர்ந்த திரு. K.R. பாஸ்கரன் அவர்களை நம் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் விழா மேடையில் கௌரவித்து நினைவுப் பரிசை வழங்கியது. திரு. கே.ஆர். பாஸ்கரன் அவர்கள் தமது ஏற்புரையை வழங்கினார். தமது இந்த முயற்சியைப் பற்றி சுருக்கமாக விவரித்தார்.

பிறகு, கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட திரு. சதீஸ் வெங்கடாசலபதி அவர்கள் பேசினார். முன்னதாக, அவருக்கு, சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டனர்.



திரு. சதீஸ் வெங்கடாசலபதி

அவர் தனது உரையில், எதிர்காலத்தில், ட்ரோன் மற்றும் ஏஐ ரோபோட்டிக்ஸ் தொழில்நுட்பம் உலகை ஆளப்போகின்ற நிலையில், இதற்கு இப்போதே நமது இளைய தலைமுறையினர் அது சார்ந்த கல்வித்துறையில் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே Indian Scientific Aerospace and Robotics கல்வி நிறுவனத்தை ஆரம்பித்ததாகத் தெரிவித்தார். இதனைத் துவக்குவதற்கு முன்னதாக, இத்துறையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றதாகத் தெரிவித்தார். அதனடிப்படையில், இந்த கல்வி நிறுவனத்தை சிறப்புற நடத்தி வருவதாகவும், நம் சமூக மாணவர்கள், 10 & +2 பயின்ற, (தோல்வி அடைந்தவர்களும்) தங்களது கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறலாம். அதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது. சாதாரண ட்ரோன் பைலட் பணிக்கே ரூ. 25000/- வரை சம்பளம் கிடைப்பதாகத் தெரிவித்தார். மேலும் பயிற்சி பெறுபவர்களுக்கு லட்சங்களில் சம்பளம் கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்தார். ஆகவே, நம் சமூக மாணவர்கள், வேலையில்லாத இளைஞர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கட்டணமின்றி பயிற்சி பெற கேட்டுக்கொண்டார்.

VIJAYASHANKAR SCREEN SUPPLIERS
Non Woven Fabrics & Bags
Surgical Spunbond & Lace
SMMS
100% Viscos
Hydrophilic
JUTE FABRICS & BAGS
COTTON FABRICS & BAGS
Sanitary Napkin Raw Materials
Screen Printing Materials /
Plastisol Ink (Sports Printing) Water Base Ink, Sublimation Ink & Paper
Surgical Gown, Mask & More
N95 Masks
PPE Kit Surgical
J.A. SANKAR
94431 34465
For Order & Info
93441 04451, 91500 32885 / 86
H.O.: 44/1, New No.105, South Masi Street, Madurai - 1. Email: vijayasankar@gmail.com
B.O.: 94, 102 & 103A, South Marret Street, Madurai - 625001



திரு. P.M. ராஜ்குமார்

அவரைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர் திரு. P.M. ராஜ்குமார் அவர்கள் பேசினார். முன்னதாக, அவருக்கு சேம்பர் சார்பாக நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

அவர் பேசுகையில், முன்பு, நம் முன்னோர்கள் பலர், அரசியலில் கோலோச்சியிருந்த காலத்தில் நமது சமுதாயம் முன்னேற்றம் அடைந்திருந்தது. இன்று முற்றிலும் ஒதுங்கி நிற்கிறோம். இதனால் பல்வேறு அடிப்படை உரிமைகள் கூட கிடைக்காத நிலைக்கு தள்ளப்படுகிறோம். சமுதாய முன்னேற்றமும், பலமும் சேர்வதற்கு அடிப்படையில், நாம் மீண்டும் அரசியலில் பிரவேசிக்க வேண்டும். மத்திய மாநில அரசின் அதிகாரப் பதவிகளிலும் நம் இளைஞர்கள் வரவேண்டும். தொழில் வர்த்தகத்தில் வாரிசுகளை ஈடுபடுத்த வேண்டும். இதனை இன்றைய நம் சமூக முன்னோடிகள் நினைவில் கொண்டு இளைய தலைமுறையினரை வழிநடத்திச் செல்லக் கேட்டுக்கொண்டு தமது உரையை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வையடுத்து, சேம்பர் துவக்க தினத்தைக் கொண்டாடும் வகையில், சேம்பர் முன்னாள் தலைவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. முன்னாள் தலைவர்கள் திரு. C.K. சேகர், திரு. E.R. குமரேசன், திரு. K.K.G. பிரபாகரன், திரு. S.K.R. ரமேஷ் மற்றும் திரு. குமரன் B. ஜகுவா ஆகியோர் சேம்பர் வளர்ச்சி பற்றி சிறு உரையை நிகழ்த்தி நிர்வாகக் குழுவை வாழ்த்தினார்கள்.

சேம்பர் துணைத் தலைவரும், சிட்கான் 2026 மாநாட்டின் தலைவருமான திரு. K.K. குபேந்திரன் அவர்கள், சிட்கான் 2026 மாநாடு மற்றும் தொழில் வர்த்தக கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் தேதியை அறிவித்து அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அனைவரும் ஆதரவு தர கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின் இடையிடையில், மூன்று குலுக்கல் பரிசுகள் மற்றும் ஒரு பம்பர் பரிசு அறிவிக்கப்பட்டன. அமர்டெக் சேஃப்டி லாக்கர்ஸ்-ன் லாக்கர், முகுந்தா எண்டர்பிரைசஸ்-ன் வாட்டர் ப்யூரிஃபயர், விஜயசங்கர் ஸ்கிரீன்-ன் மிக்ஸி ஆகியவையும், பம்பர் பரிசாக, ஓரியண்டல் பில்டர்ஸ் மற்றும் ஸ்ரீமீனாட்சி கன்ஸ்ட்ரக்ஷன்-ன் 32 இன்ச் டிவி வழங்கப்பட்டன.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இந்த விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.



முன்னாள் தலைவர்கள் உரை



விழாவில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்

# 77வது குடியரசு தின விழா கொண்டாட்டம்



பாரத தேசத்தின் 77வது குடியரசு தின விழா நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் வளாகத்தில் கொண்டாடப்பட்டது. 26.01.2026 அன்று காலை சரியாக 8.30 மணிக்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்களின் கரங்களால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. நாட்டுப்பண் பாடப்பட்டபின் அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் அறுசுவை சிற்றுண்டி வழங்கப்பட்டன.



திரு. Y.R. ஜனார்த்தனன்



திரு. நேதாஜி V. சுவாமிநாதன்

இந்த நிகழ்வையடுத்து, குடியரசு தின சிறப்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சிறப்பு விருந்தினராக திரு. Y.R. ஜனார்த்தனன் Scientist, DRDL(DRDO), Hyderabad, Project Director(Retd.), Helina & Dhruvastra அவர்களும், கௌரவ விருந்தினராக, திரு. நேதாஜி V. சுவாமிநாதன் Editor, Desiya Valimai (Monthly Magazine) Organizer, Nethaji Desiya Iyakkam அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள்.

கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார். அங்கத்தினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சிறப்பு சந்திப்பு




வாத்வானி ஃபண்வுடேசன் Chennai Hub Head திரு. C. பிரகதீஷ் அவர்கள் தென் தமிழக தொழில் மேம்பாட்டிற்காக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகளை சந்தித்துப் பேசினார். கூட்டு முயற்சியில் தொழில் வளர்ச்சி அடைவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டது. உற்பத்தித் தொழில் தவிர டிரேடிங் மற்றும் சர்வீஸ் துறைகளுக்கும் நல்வாய்ப்புகள் பெறலாம் என்றார்.

# ஸௌராஷ்ட்ரர் ஒற்றுமை தினம் பிப்ரவரி 19

சில குறிப்பிட்ட தினங்களை உலகம் முழுவதுமாகவோ, ஒரு நாட்டின் அளவிலோ, மாநிலத்திற்குள்ளோ கொண்டாடப்பட்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம்!

மே தினம் - தொழிலாளர்களுக்காக உலகம் முழுவதுமாக, சுதந்திர தினம், குடியரசு தினம் போன்றவை நம் நாடு தழுவியும், தமிழ் வருடப்பிறப்பு, பொங்கல் பண்டிகை முதலியன தமிழகத்தின் அனைத்து மக்களுமாக கொண்டாடி வருகின்றோம். இவைகளைத் தவிர, நாட்டிற்காக உழைத்த தலைவர்களின் பிறந்தநாளை அவரது தொண்டர்கள் கோலாகலமாக கொண்டாடிவருவது அந்தந்த தலைவர்களின் தியாகங்களை நினைவுகூர்வதின் வெளிப்பாடு எனலாம்.

இவற்றையெல்லாம் கடந்து, அன்னையர் தினம், மகளிர் தினம், காதலர் தினம் என உறவுமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் தினங்கள். ரத்ததான தினம், செவிலியர் தினம் என சேவைகளை ஊக்குவிக்கும் தினங்கள் என பலதரப்பட்ட வகையில் பல்வேறு தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இவை இப்படியிருக்க, நம் முன்னோர்கள் 56 தேசங்கள் என்று அழைக்கப்படும் திவ்யதேசங்களில் வாழ்ந்து வருகையில், அனைவருக்கும் பொதுவாக, சமூகத்திற்காக உழைத்தவர்களை நினைவில் நிறுத்தி, ஒற்றுமை தினம் என கொண்டாடுவது என்று **S-PAC** முடிவெடுத்திருக்கிறது. 130 ஆண்டுகளுக்கு முன்னரே, 1897ல் கும்பகோணத்தில் முதல் சௌராஷ்ட்ரர் மகாநாடு நடந்த நாளினை போற்றும் வகையில் பிப்ரவரி 19ம் தேதி அன்று கொண்டாடுவது சாலச் சிறந்தது என்று பரிந்துரைக்கப்பட்ட நிலையில், நம் சமூகத்தின் அனைத்து சங்கங்களும் இதனை ஆமோதித்து, வழிமொழிந்து, பல முன்னேற்பாடுகளை செய்து வருகின்றன.

சௌராஷ்ட்ரீ மொழியையும், கலாச்சாரத்தையும் கட்டிக்காக்கும் வகையிலும், இளைய சமுதாயத்தின் மனதில் நம் பண்பாடுகளை விதைக்கும் நோக்கத்திலும், இந்த பிப்ரவரி 19ந் தேதி (வியாழக்கிழமை) அன்று நம் மக்கள் அனைவரும், ஆங்காங்கே, தத்தமது ஊர்களில் கூடிமகிழ்ந்து, நம் சமூகத்தின் உதாரண புருஷர்களை நினைவுகூர்ந்து, அவர்தம் தன்னலமில்லா சேவைகளை எடுத்துரைத்து, போற்றிப்பாராட்டி அவர்களது வழிநடக்க உறுதிமொழி ஏற்கலாம்! குறிப்பாக, பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு, மாணவர்களுக்கு மதிய உணவு திட்டம் போன்ற சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுத்து, முற்போக்கு சிந்தனைகளை முன் நிறுத்திய ஆன்றோர்கள், சான்றோர்களையும், பக்தி மார்க்கத்திலும், இசையிலும், இலக்கியத்திலும், ஆன்மிக உணர்வூட்டிய புண்ணிய ஆத்மாக்களையும் நம் இளைஞர்களுக்கு சென்றடையும் வண்ணம் சொற்பொழிவுகள் நிகழ்த்தலாம்!!

கல்விக்கு, மிக முக்கியமாக, பெண்கள் படிப்பறிவு பெற பாடுபட்ட பண்பாளர்களையும், ஆலை, தொழிற்சாலைகள் அமைத்து வேலை வாய்ப்புகள் உருவாக்கி, அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்கு வித்திட்ட சிந்தனை சிற்பிகளையும், இன்றியமையாத மருத்துவ சேவையை இலவசமாக வழங்கிய வள்ளல்களையும், இப்படிப்பட்ட மானிடப்பிறவிகளின் அடிப்படை தேவைகளை கிடைக்கச் செய்து, குலம் விளங்க வைத்த குணவான்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்றைய தலைமுறையினர் அடுத்து வரும் சந்ததியினர்களுக்கு பாலம் அமைத்துத் தர வேண்டும்.

இவை அனைத்தும் நிறைவேறி, ஆகச்சிறந்த சமூகமாக நம் இனம் மிளிர, **சௌராஷ்ட்ரர் ஒற்றுமை தினம்** என்பதனை ஓர் அரிய வாய்ப்பாக எடுத்துக்கொண்டு தேர்ந்த வகையில் கொண்டாடி வருவோம்!!!

இந்த ஆண்டுதான் முதன்முதலாக கொண்டாட்டம் துவக்கம் என்பதாலும், வேலைநாள் எனப்படுவதாலும், அன்றைய தினம் (பிப்ரவரி 19) சம்பிரதாயமாக ஆரம்பித்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 22) நிறைவு விழாவாகவும் கொண்டாடி மகிழலாம்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த ஒற்றுமை தினத்தை பிப்ரவரி 19 அன்று கொண்டாடி வருகையில் நம்மில் ஒற்றுமை மட்டுமல்ல மற்ற அனைத்து செல்வங்களும் நிரம்பப்பெற்று நம் சமூகம் நீடூழி வாழும்.

வாழ்க சௌராஷ்ட்ரம்... *– வீரஜா*




கடந்த ஜனவரி 29ம் தேதி அன்று கோவையில் நடைபெற்ற சர்வேதச ஜவுளி உச்சி மாநாட்டில், மாண்புமிகு துணை முதல்வர் திரு. உதயநிதி ஸ்டாலினுடன், ஜவுளித் துறையின் கீழ் 50 கோடி மற்றும் 250 பணியாளர்களைக் கொண்ட தொழில்நுட்ப ஜவுளித் தொழிற்சாலைக்கான தமிழ்நாடு அரசுடன் நமது சேம்பர் ஆயுட்கால உறுப்பினர் திண்டுக்கல் பாலவிக்னா வீவிங் மில் பி.லிட்., புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதேபோல, நமது சேம்பர் முன்னாள் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்களின் குவாலிட்டி நிட் வியர்ஸ் நிறுவனமும் 30 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இவ்விரண்டு நிறுவனத்தார்களையும், நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நமது சமூகத்தின் சார்பாக, நமது சேம்பர்-ன் சார்பாக நமது தொழில்முனைவோர்களின் பங்களிப்பை சேம்பர் பெருமையாக கருதுகிறது.

# நிகழ்வுகள் சில...




20.01.2026 அன்று ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் லாப் ஸமாச்சார் மாதாந்திர வணிக இதழை கப்பலூர் தொழிற்பேட்டை அமைப்பின் தலைவர் திரு. ரகுநாதராஜா அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்விற்கு திரு. ரகுநாதராஜா அவர்கள் நமது சேம்பர் வளாகத்திற்கு வருகை தந்தார். இந்த சிறப்பு சந்திப்பில், பல்வேறு தொழில் குறித்த கருத்துக்களை தெரிவித்தார். நமது சேம்பர் உறுப்பினர்களும் தொழிலில் பயன்பெற பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்த கூட்டத்தில், நமது சேம்பர் நிர்வாகிகள், முன்னாள் தலைவர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.




அதிமுக மற்றும் த.வெ.க கட்சிகள் தேர்தல் வாக்குறுதிக்காக அமைப்புகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெறும் கூட்டத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தனர்.

# ஜிஎஸ்டி-குறைதீர்க்கும் கூட்டம்



23.01.2026 அன்று மதுரை மத்திய ஜிஎஸ்டி வரி குறைதீர்ப்பு கூட்டத்தில் ஸௌராஷ்ட்ர சேம்பர் சார்பாக துணைத் தலைவர் திரு. K.K.குபேந்திரன் மற்றும் செயற்குழு உறுப்பினர், அரசுத் தொடர்புக் குழு ஒருங்கிணைப்பாளர் திரு. N.S. பிரேம் குமார் ஆகியோர் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தனர். இந்த கூட்டத்திற்கு, ஜிஎஸ்டி வரி ஆணையர் திரு. சோமேஸ் திவாரி அவர்கள் தலைமைத் தாங்கினார்.










Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...



மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIGNESH GRAPHICS



All Kinds of Printing Solution

- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 31 Years 2023 SVS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்

20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.02.2026 / BPC MDU
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

**Kuttuva Silicates (P) Ltd.,**
5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy, Joint Replacement

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL
RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee

Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு 78000 ரூ அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

MSME
TANGEDCO

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011



*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com